4. சிறப்புக் கவன ஈர்ப்பு

சாத்தூர் நகரில் நிலவும் குடிநீர்த் தட்டுப்பாடு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, சாத்தூர் நகரில் நிலவும் குடிநீர்த் தட்டுப்பாடு குறித்து கவன ஈர்ப்பு அறிவிப்பாக எடுத்துக் கொள்ளுமாறு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள அனுமதி அளிக்கிறேன். இதுகுறித்து சுருக்கமாக எடுத்துக்கூறுமாறு அழைக்கிறேன். திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்.

முற்பகல் 10–30

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சாத்தூர் நகரில் குடிதண்ணீர் பஞ்சம் மிக அதிகமாக உள்ளது. கடந்த 5 மாத காலமாகவே மிக மோசமாக இருந்த காரணத்தால், முன்பு எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அரசிடத்திலே சொல்லி, லாரிகளிலே தண்ணீர் எடுப்பதற்காக ரூ.10.00 இலட்சம் சாத்தூர் நகராட்சிக்கு நான் வாங்கிக் கொடுத்திருந்தேன். அந்த அடிப்படையில், 8–8–2001 வரையில், அந்தப் பணத்திலே லாரி மூலமாக தண்ணீர் விநியோகம் செய்திருந்தார்கள்.

கடந்த 8–8–2001–க்கு மேல், பணம் இல்லையென்று சொல்லி, கடந்த 25 நாட்களாக சாத்தூர் நகரத்திலே லாரி மூலமாகத் தண்ணீர் கொடுக்காமல், தண்ணீருக்காக தெருவிலே மக்களெல்லாம் அலையக்கூடிய மிக மோசமான, அவலமான சூழ்நிலை சாத்தூர் நகரிலே இருக்கின்றது. அதுமட்டுமல்ல, இதேபோல சிவகாசியிலும், விருதுநகரிலும் குடிதண்ணீர்ப் பஞ்சம் அதிகமாக உள்ள காரணத்தால், இந்த அரசாங்கம் லாரி மூலமாகத் தண்ணீரை விநியோகிப்பதற்கு வேண்டிய உதவிகளை, பணத்தை அளிக்குமா என்பதைக் கேட்பதற்காக நம்முடைய அரசாங்கத்தினுடைய கவனத்தை நான் ஈர்க்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தூர் நகருக்கு வைப்பாறு குடிநீர்த் திட்டத்தின் மூலம்

குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இக்குடிநீர்த் திட்டத்திலுள்ள 5 கிணறுகளில், பருவ மழை தவறியதன் காரணமாக, 3 கிணறுகளில் குடிநீர் முழுமையாக இல்லை. மீதமுள்ள 2 கிணறுகளில் கசப்புத் தன்மையின் காரணமாக தண்ணீர் எடுக்கப்படவில்லை. கோவில்பட்டி, சீவலப்பேரி திட்டத்தின் மூலம் 9–8–2001 முதல் குடிநீர் பெறப்பட்டு, 2 மேல்நிலைத் தொட்டிகளில் தண்ணீர் சேகரிக்கப்பட்டு, சாத்தூர் நகருக்கு தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது. இருக்கன்குடியில் உள்ள தனியார் கிணறுகளில், தண்ணீர் கிரயம் பெற்று, நகராட்சி லாரி மூலமும், நகராட்சி மினி டேங்கர் மூலமும், குழாய் மூலமும், குடிநீர் கிடைக்கப்பெறாத பகுதிகளில் விநியோகம் செய்யப்படுகிறது. கசப்புத் தன்மையின் காரணமாக 2 கிணறுகளில் தண்ணீர் எடுக்கப்படவில்லை. வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு, 10.00 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, லாரிகள் மூலமும், டேங்கர் மூலமும் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் முழுவதும் செலவு செய்யப்பட்டபோதிலும், மேலும் தற்சமயம் சாத்தூர் நகராட்சிக்கு ரூ.5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, லாரிகள் மூலமாகவும், டேங்கர் மூலமாகவும், குடிதண்ணீர் வழங்க, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில், சாத்தூர் நகரில் 24 வார்டுகளில், 10 டிராக்டர்கள் மூலம் தினமும், 40 நடைகள் குடிதண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. கவன ஈர்ப்பு

கரும்புக்கு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் விலை நிர்ணயம் செய்யாததால் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 55–ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். இதேபொருள் குறித்து திரு. ஜி.கே. மணி அவர்களும் இப்போது கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அவரும் கேள்வி கேட்கலாம். இப்போது திரு. சி. ஞானசேகரன்.